THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

ஆகஸ்ட்
2006
மரம் 6
கனி 9
ஆண்டு சந்தா ரூ. 50/-
தனி பிரதி ரூ. 5/-

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால்,
உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல்
வைத்துவிடுங்கள் – 1பேதுரு5:7

கடலூர் மாவட்டம்



29.7.06

கடலூரில் நடைபெற்ற 23 வது கிறிஸ்துவின் வசனம்
வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்


## கிறிஸ்துவின் சபையார் வழங்கும்
## கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி



உங்கள் WIN TV -யில்
ஒவ்வொரு வாரமும் திங்கள்,
செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
காலை 6.15 முதல் 6.30 மணி வரை
பாருங்கள். மற்றும்

WIN tv
The Word of Christ

செய்தியாளர்
B. அர்ஜுனன்




உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய
சேவை 49 மீட்டரில், ஒவ்வொரு புதன்
மாலை 5.45 முதல் 6.00 மணி வரை
கேளுங்கள்.

**THE WORD OF CHRIST**
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA
Phone: 04543 263278 Cell: 9443558041

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

**"The Churches Of Christ salute you" Romans 16:16**

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 6 ஆகஸ்ட் - 2006 கனி - 9


ஆசிரியருரை

# தேவ பக்தியின் இரகசியம்

## The Mystery of Godliness



தேவ பக்தியின் இரகசியத்தைக் குறித்து பலர் பலவிதமான கருத்துடையவர்களாயிருக்கின்றனர். இந்த இரகசியத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது மிகத் தெளிவாக எழுதுகிறார். "தேவபக்திக்குரிய இரகசிய மானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிற படியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதி களிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப் பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப் பட்டார்" (1தீமோ.3:16). காலம்காலமாக பிதாக்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் தம்முடைய வார்த்தைகள் மூலம் பேசிவந்தார்.

கடைசி நாட்களிலே **தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். God was manifest in the flesh.** எப்படி வந்தார்? எப்பொழுது வந்தார்? என்ற கேள்வி எழும்புகிறது. தீர்க்கதரிசன புஸ்தகத்திலே சொல்லப்பட்ட படியாக "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத்.1:23). அந்தப்படியாக இயேசு கிறிஸ்துவை மரியாள் பெற்றெடுத்தாள். அந்நாட்களிலே உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது. அவருடைய பிறப்பை வைத்து சரித்திரம் இரண்டாகப்பிரிக்கப்பட்டு கி.மு. B.C. என்றும் கி.பி. A.D. என்றும் சொல்லப்படுகிறது. இது ஏதோ ஒரு மூலையில் நடந்த சம்பவம் அல்ல உலகமறிந்த உண்மையாயிருக்கிறது. "ஆகையால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" (எபி.2:14). ஆனபடியால், பவுல் இது குறித்து எழுதும்போது தேவபக்தியின் இரகசியமானது

யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் என்று எழுதுகிறார்.

**ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். Justified in the spirit.** "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர்தோன்றி அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும்" என்ற ஏசாயா11:1-5-ன்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். ஒரு முறை "விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி: போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவளைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார். அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர் முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள் இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள். இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்" (யோவா.8:3-10). ஆம், அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும் நியாயம் விசாரித்து தீர்ப்புச்செய்யக்கூடிய நியாயாதிபதியாக இருக்கிறார். அவருடைய வல்லமையுள்ள வசனம் ஒவ்வொருவரையும் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்.

**தேவதூதர்களால் காணப்பட்டார். Seen of angels.** இயேசுவின் பிறப்பின்போது "அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன்

அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்த க்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்,பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்.2:8-14). இயேசுவினுடைய பிறப்பின் நற்செய்தியை முதன்முதல் தேவதூதர்கள் மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள். அந்தநேரமே பரம சேனைகள், அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்தின் தேவனைத் துதித்தார்கள்.

**புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார். Preached unto the gentiles.**

பேதுருவின் தரிசனத்தில்: "நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒரு கூடு வானத்திலிருந்து என்னிடத்தில் இறங்கிவந்தது. அதிலே நான் உற்றுப்பார்த்துக் கவனிக்கிறபோது, பூமியிலுள்ள நாலுகால் ஜீவன்களையும், காட்டு மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும், ஆகாயத்துப் பறவைகளையும் கண்டேன். அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தையும் கேட்டேன். அதற்கு நான்: ஆண்டவரே, அப்படியல்ல, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை என்றேன். இரண்டாந்தரமும் வானத்திலிருந்து சத்தம் உண்டாகி: தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதேயென்று மறுமொழி சொல்லிற்று. இப்படி மூன்றுதரம் சம்பவித்த பின்பு, எல்லாம் வானத்திற்குத் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டது" அப்.11:5-10. இதை அறிந்த பேதுரு புறஜாதிகளுக்கும் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தான். "ஆதலால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்கு தேவன் வரத்தை அனுக்கிரகம் பண்ணியிருக்கும்போது தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான். இவைகளை அவர்கள் கேட்ட பொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (அப்.11:17,18). இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்த கட்டளையில் நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுபோய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றார். ஒரு கூட்டஜனமாகிய இஸ்ரவேலை வழி நடத்திய தேவன் இக்கடைசி நாட்களிலே சர்வ சிருஷ்டிக்கும் பிரசங்கிக்க கட்டளை கொடுத்திருக்கிறார். புறஜாதி மக்களும் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்கின்றனர்.

**உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார். Believed on in the world.**

தேவனுடைய ஜனங்களாகிய யூதர்கள் அப்போஸ்தலர்களை ஏற்றுக்கொள்ளாமல் எதிரிடையாய்ப் பேசி விரோதித்துத் தூஷித்தார்கள். "அப்பொழுது பவுலும் பர்னபாவும்

தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள். புறஜாதியார் அதைக் கேட்டுச்சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்" (அப்.13:46-48). ஆம் பிரியமானவர்களே, ஆண்டவரை விசுவாசித்தவர்கள் அவருடைய வார்த்தைகளைப் பற்றிக்கொண்டு அவரை மகிமைப்படுத்தினார்கள். பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம். இயேசுவானவரை தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார். அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பிலே நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

**மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார். Received up into glory.**

கர்த்தர் அப்போஸ்தலர்களை நோக்கி: பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயாமுழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார், அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர்போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று; கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்.1:8-11). இயேசுவின் வருகையிலே கர்த்தருக்குள்ளாக மரித்தவர்கள் முதலாவது எழுப்பப்படுவார்கள். பின்பு உயிரோடிருக்கிறவர் கர்த்தருடையவர்களும் அப்படியே ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு அவரோடு என்றென்றும் நித்திய நித்தியமாக இருப்பார்கள்.

தேவ பக்தியின் இரகசியத்தைத் குறித்து இச்செய்தியின் மூலமாக தியானித்தோம். இந்த இரகசியம் மனுமக்களாகிய யாவருக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் மனிதனாக அவதரித்து மனிதனுடைய பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு நாம் ஜீவனுள்ளவர்களாயிருக்கும் பொருட்டு அவர் எழுப்பப்பட்டும் இருக்கிறார். இதுவே சுவிசேஷம் இதற்கு கீழ்ப்படிந்து உங்களை ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்புக்கொடுங்கள்.

# வாசல்களைத் திறவுங்கள்
# Open Doors

***J.C.Choate***



சபையின் பணி சுவிசேஷத்தை உலகத்திற்குப் பிரசங்கிப்பதே ஆகும். நாம் சபையின் அங்கத்தினர்கள் என்றால், பிறகு அதுவே நம்முடைய பணியாகும். அந்தப் பணியைச் செய்யாமைக்கு அடிக்கடி நாம் மன்னிப்புகளைக் கோருகிறோம். நாம் அதிகவேலையிருக்கிறது.... அல்லது அதிக வேலையோடு தொடர்புடையவர்களாயிருக் கிறோம்..... செய்யவேண்டி அந்த வேலையைச் செய்வதற்கு நமக்குப் பணம் தேவையாயிருக்கிறது...... மேலும் நாம் சொந்த இடத்திற்கே தேவையாயிருக்கும் போது உலகத்தின் மற்றப்பகுதிக்கு ஏன் செல்ல வேண்டும்? ஜனங்கள் ஆர்வமில்லாமலிருக்கிறார்கள் என்றும், இலக்கியம், ரேடியோ மற்றும் டி.விக்கு செலவழிப்பது பணவிரயமாகிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிச்செய்யும் போது சபை வளராமலிருப்பதும் கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நமக்குக் கொடுத்தபணி செய்யப்படாமலிருப்பதும் ஆச்சரியமல்ல.

சுவிசேஷம் அதிகமான ஆத்துமாக்களைச் சென்றடையும் படிக்கு நாம் என்ன செய்யவேண்டுமென சபையின் மூப்பர்களும் அங்கத்தினர்களும் தீவிரமாக யோசிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொருநாளும் பெருகிக் கொண்டேயிருக்கிற மக்கள் தொகையில் ஜனங்கள் உண்டு. தேவையும் பெரியதாயிருக்கிறது. இது நம்மை நோக்கி வருகின்றதென்றால் பிறகு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? மற்றவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருப்பதைப் பார்க்க நாம் விரும்புகிறோமா? கர்த்தர் நம்மை செய்யும்படிக்குக் கேட்டுக்கொண்டதை செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோமா?

சந்தர்ப்பத்தின் வாசல்கள் எங்கும் காணப்படுகின்றன. நாம் நம்முடைய கண்களைத் திறந்து அவைகளைக் காணவேண்டியது அவசியம். தருணங்கள் இல்லாதது போல காணப்பட்டால், நாம் தருணங்களை உருவாக்கலாம். அவற்றை எவ்வாறு உருவாக்குவது? ஓரளவு முயற்சிசெய்வதன் மூலம். ஒரு காரியம் வாய்க்கவில்லையென்றால், இன்னொன்றிற்கு முயற்சி செய்யுங்கள். விட்டு விடாதீர்கள். நாம் தொடர்ந்து அதை நடப்பிப்போமென்றால், வாசல் நமக்கு திறக்கும். ஒரு முறை அந்த வாசல் வழியே சென்றால், மற்ற வாசல்கள் திறக்கும், சீக்கிரமாய் நாம் செய்ய வேண்டிய பணிகளை அதிகம் பெற்றவர்களாயிருப்போம், அனைத்து பலனையும் பெறும்படிக்கு உதவியை நாடுகிறவர்களாவோம்.

திட்டங்களை உருவாக்குவதிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் நான் ஒரு பெரிய் விசுவாசியாகயிருக்கிறேன். நீங்கள் செய்யாத போது, எதைச் செய்வதற்கும் நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள் - மேலும் வழக்கமாக நீங்கள்

எதையும் செய்ய மாட்டீர்கள்! பல வருடங்களாக இந்தியாவில் ஊழியஞ்செய்து கொண்டு வருகின்றோம். இந்திய அரசாங்கம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் தன்னுடைய திட்டங்களை நிர்ணயிக்கிறதை நான் கவனித்தேன். அவர்கள் அதிமுக்கியமான தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த திட்டங்களை செயல்படுத்தும்படிக்கு உதவிக்காக மற்றநாடுகளை நாடி தங்களுடைய இலக்குகளை அடைகின்றனர். ஒரு திட்டம் நிறைவேறி அந்த இலக்குகளை அடைந்த போது, அவர்கள் வளர்ச்சியோடு கூட மற்றொரு ஐந்தாண்டுத் திட்டத்தினை வெளியிடுவார்கள்.

திட்டமிடாததும் இலக்குகள் நிர்ணயிக்கப்படாததுமான ஒரு வியாபாரத்தை எனக்குக் காண்பியுங்கள் நான் உங்களுக்குத் தோல்வியை கொண்டுவருகிற ஒரு வியாபாரத்தை காண்பிக்கிறேன். இந்தியா முழுவதும் சிறிய வியாபாரங்களையும், பழக் கடைகளையும், இன்னும் இது போன்ற பலவற்றை நான் கண்டிருக்கிறேன். சொந்தமாக கடைகளை வைத்து நடத்துகின்ற அவர்கள் தாங்கள் செய்கின்ற தொழிலில் திருப்தியடைகின்றனர். ஒரு நாளைக்கு, வாரம், மாதம், மற்றும் ஆண்டிற்கானத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படிக்கு கூடுமான அளவு சம்பாதித்து, அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கின்றனர். ஆனால் மற்றவர்களோ அவற்றில் திருப்தியடைவதில்லை. அவர்கள் தங்களுடைய வியாபாரம் விருத்தியடைந்து கடைசியில் நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு கடையை ஆரம்பித்து, தொடர்ந்து இன்னொரு கடை, இன்னொரு கடை என ஏற்படுத்துகின்றனர். அவர்கள் அந்த நகரில் அதிகமான கடைகளையோ அல்லது வியாபாரங்களையோ நடத்துபவர்களாயிருக்கின்றனர். ஆனால் அவைகள் அவர்களுக்குப் போதுமானதாயில்லை. அவர்கள் தொடர்ந்து மற்ற நகரங்களுக்கும் முடிவாக நாடு முழுவதிலுமுள்ள நகரங்களுக்கும் நகருகின்றனர். அவர்களுடைய தரிசனம் மற்ற நாடுகளுக்கும் விரிவடைந்து செல்லுவதற்கான தருணங்களை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. நாம் எல்லோரும் துரித உணவு வியாபாரங்கள், குளிர்பானக் கம்பெனிகள், கார்கள், ஆகாயவிமானங்கள் மேலும் உலகமுழுவதிலும் காணப்படுகின்ற பெயர் பெற்ற தயாரிப்புகள் போன்றவைகள் பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். இப்பேர்பட்ட உலகளாவிய விற்பனை எதிர்பாராதவிதமாக நிகழவில்லை. இவைகள் அந்தந்த தலைவர்கள் கொண்டிருந்த தரிசனம், உருவாக்கின திட்டங்கள், உலகையடைய நிர்ணயித்த இலக்குகள் போன்றவற்றால் நிகழ்ந்தது. மிகக் கடினமான உழைப்பு, உரிமையாளர் முதற்கொண்டு அவரோடு ஒத்துழைத்த சக உழைப்பாளிகளோடு வெற்றிபெற மேற்கொண்ட உழைப்பு போன்றவைகளே இந்த நிகழ்விற்கு ஆதாரம், ஆனால் அவர்களுடைய முயற்சிகள் முடிவிலே இலக்குகளை அடைவதோடுகூட முடிசூட்டப்பட்டன.

கர்த்தருடைய ஜனங்களாகிய நாம், இவ்வுலகில் மிகச்சிறப்பான உற்பத்திப்பொருளைக் கொண்டிருக்கிறோம்: அது சுவிசேஷம், இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தி, மேலும் அவர் தருகிறதான இரட்சிப்பு. நாம் சத்தியத்தை உடையவர்களாயிருக்கிறோம். இப்போதைக்கு, இந்த உற்பத்திப்

பொருளின் மேல் விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மேலும் மற்றவர்களை இந்த இரட்சிப்பிற்குள் கொண்டுவரும்படி என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றிற்கு முதலீடு செய்ய தன்னார்வமுள்ள ஊழியர்கள் தான் நம் அனைவருடைய தேவையாயிருக்கிறது. சில லௌகீக உற்பத்திப் பொருளை விற்பனை செய்கின்ற மனிதனைப் பற்றிய காரியம் என்ன? அவன் வாழ்வதற்குத் தேவையானவற்றை உற்பத்திசெய்ய வேண்டியவனாயிருக்கிறான். நம்மைக்குறித்தும், மனிதவர்க்கத்திற்கென்று நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற உற்பத்திப் பொருளைக் குறித்ததுமான பற்றிய காரியம் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்பினால் நாமும் கூட கட்டாயமாக உற்பத்தி-செய்யவேண்டும்.

எனது சொந்த அனுபவத்தைப் பொறுத்த மட்டில் என்னுடைய குடும்பமும் நானும் பலவருடங்களுக்கு முன்பாகவே இந்தியா வர விருப்பப்பட்டோம். நாங்கள் விசா பெறும்படிக்கு பல முறை முயற்சித்தோம் ஆனால் பெற முடியவில்லை. நாங்கள் முயற்சியை கைவிட்டிருந்திருக்கலாம் ஆனால் நாங்கள் விடவில்லை. மாறாக நாங்கள் பல வருடங்களாக பாகிஸ்தான் சென்றோம், மீண்டும் இந்தியா வர முயற்சித்தோம் ஆனால் ஸ்ரீலங்கா வழியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். கடைசியாக நாங்கள் இந்தியாவிற்குள் நுழைந்தோம். தொடர்ச்சியான விசா பிரச்சனையின் காரணமாக இரண்டு வருடங்களுக்கு நாங்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியவர்களாயிருந்தோம். அந்த சமயத்தில் ஸ்ரீலங்காவில் வானொலி நிலையம் துவங்கப்பட்டது. இந்தியாவிற்கெனவும், ஆசியாவிற்கெனவும், பலமொழிகளில் வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பும்படியான சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடவில்லை. மேலும், நாங்கள் இலக்கியத்தை பலமொழிகளில் (வேதாகம அஞ்சல்வழி பாடத்திட்டங்கள், மாத இதழ்கள், துண்டுப்பிரதிகள், மற்றும் புத்தகங்கள்) அச்சிட்டு பிரசுரிக்கும்படிக்கு ஒரு மாபெரும் முயற்சி மேற்கொண்டோம். இலக்கியத்தின் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும் நேபாளம், சிங்கப்பூர், கிழக்குமலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மியான்மர், மற்றும் ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளிலும் உலக முழுவதிலும் ஊழியம் செய்யும்படிக்கு இது வழி நடத்தியது. இன்று இந்தியாவிலேயே தொலைக்காட்சி ஒலிபரப்புகிறதான டி.வி. நிகழ்ச்சி மூலம் சுவிசேஷம் பரவுவதற்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது! மற்றபடி தேவன் வாசல்களைத்திறந்தார், நாங்கள் அதன் வழியாக மற்ற வாசல்களை கண்டடையும்படி சென்றோம். கர்த்தருடைய ஊழியத்தை விரிவாக்கும்படியான வாசல்கள் திறக்க காத்திருப்பீர்கள் என்றால் உங்களுக்கும் எங்களுக்கும் எவ்விதமான வாசல்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதை அவர் அறிவார்.

என்னுடைய குடும்பமும் நானும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் கர்த்தருடைய சபையை ஸ்தாபிப்பதற்கும் பல லட்ச மக்களை கொண்ட பட்டணங்களில் நுழைந்திருக்கிறோம். நாங்கள் அங்கு சென்றபோது ஒரு ஆத்துமாவைக்கூட அறியவில்லை, ஆனால் நாங்கள் அங்கே இருந்தோம், மேலும்

நாங்கள் கர்த்தர் எங்களோடிருந்தார் எனவும் அங்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு அருளப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டோம். முதல் ஞாயிறு நாங்கள் எங்களுடைய ஹோட்டல் அறையிலேயே தேவனை ஆராதிக்கவேண்டியவர் களாயிருந்தோம், பின்பு ஒரு வாடகை வீட்டில் அல்லது எங்கெல்லாம் நாங்கள் சென்றோமோ அங்கெல்லாம் ஆராதனை செய்தோம். வழக்கமான அந்த ஞாயிற்று கிழமையில் எங்களோடு ஆராதனை செய்யும்படி யாரோ ஒருவரை கண்டுபிடித்துக்கொண்டோம், அதை நாங்கள் தொடர்ச்சியாகச் செய்கையில், நாங்கள் அநேகம் அநேகம் பேர்களை எங்களோடு வேத ஆராய்ச்சி செய்யும்படி கண்டுபிடித்தோம்! சீக்கிரமாய் அங்கே மனந்திரும்புதல்கள் நடைபெற்றது. நான் மதசம்பந்தப்பட்ட புத்தக சாலைகளையும், வேதாகம சங்கங்களையும், சமயக் கூட்டங்களையும் கூட (ஒருமித்துப்போக அல்ல, தொடர்பு ஏற்படுத்தி நாங்கள் இருக்குமிடத்தினை ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு). சந்தித்தேன், கைப்பிரதிகளையும் அழைப்பு அட்டைகளையும் அச்சிட்டு கடைகளில் இருப்பவர்களுக்கும், சந்தையிலும் அல்லது யாரையெல்லாம் நாங்கள் சந்திக்கிறோமோ அவர்களையும் எங்களுடைய கூட்டங்களிலும் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய கலந்து கொள்ளும்படி அழைத்தோம். நான் நம்முடைய அஞ்சல் வழி பாடத்திட்டத்தினை செய்தித்தாளில் விளம்பரப்படுத்தினேன். மேலும் எங்கெல்லாம் வாய்ப்புண்டோ, அங்கு நான் விரைந்து உபதேசித்து உள்ளூர் செய்திதாட்களிலும் விளம்பரப்படுத்தினேன். இதன் விளைவாக ஜனங்களோடு அறிமுகமானோம், கூட்டங்களுக்கு அவர்களை அழைத்தோம், அவர்களுடைய வீடுகளில் வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தினோம், அவர்களில் அதிகமானோர் மனந்திரும்பினார்கள், கற்பிக்கவும் போதிக்கவும் சிலருக்கு கற்றுக்கொடுத்து பயிற்சியளித்தோம், இன்றோ வானொலி நிகழ்ச்சியிலும், இந்திய தொலைக்காட்சி நிலையங்களிலும் மேலும் ஆசியாவின் மற்ற நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவிக்கிற மூப்பர்களையும் பிரசங்கியார்களையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். இது நாங்கள் செய்ததை நொடிப்பொழுதில் வெளிப்படுத்துகிறது. யாரெல்லாம் திறந்த வாசல்கள் வழியாகச் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்களோ அவர்களோடு கூட எங்களால் தொடந்து பணியாற்ற இயலுகிறது. நம்மில் எங்களுடைய பூரண இலக்குகளை அடையாதபோதிலும், செய்யவேண்டிய காரியங்கள் அதிகமிருக்கிறபடியால், நாம் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய காரியத்தை பரப்பவிரும்புகிறபோது, அதைச் செய்ய அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என எங்களால் உறுதியாக அறிவுறுத்த முடிந்தது.

கிறிஸ்து, "...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"(மாற்16:15,16) என்றார். மறுபடியும், அவர், "....இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச்

சொல்லுகிறேன்"(யோவா.4:35) என்றார். இன்னொரு சமயம் அவர், ".....அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (லூக்.10:2) என்றார்.

இயேசு, "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்.7:7,8) எனவும் துரிதப்படுத்தினார். இந்தக்காரியங்கள் நிறைவேறும்படிக்கு, ஒரு தனிமனிதன் இதற்கான முயற்சியினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென, இது குறித்ததான வாக்குத்தத்தங்களை தயவுகூர்ந்து கவனியுங்கள். ஆனால், தேனாலே எல்லாம் கூடும் (19:29) என்பதை நினைவுகூருங்கள், மேலும் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம.8:31). மறுபடியும் கிறிஸ்து நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், நம்முடைய தேவைகள் எல்லாம் கொடுக்கப்படும் (மத்.6:33) என்றார், மேலும் கர்த்தர் உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நம்மோடு இருப்பேன் எனவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பவுல் தன்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய தனக்குப் பெலனுண்டு என அறிவித்தான் (பிலி.4:13).

என்னுடைய சகோதரரே, இதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். நாம் உலகைப் பார்க்க தரிசனத்தோடு கூட நம்முடைய கண்களை ஏறெடுக்கும்போது, நாம் இசைந்த உதவிக்காரர்களாக மாறுவோம்: தேவன் நம்மை பெலப்படுத்துகிறவர், கிறிஸ்து நம்மை வழிநடத்துகிறவர், சுவிசேஷம் (இரட்சிப்பிற்கென்று தேவவல்லமை யுடையது) பிரசங்கிக்கப்பட வேண்டியது, மேலும் நாம் கர்த்தருடைய பிள்ளைகளை நமக்கு உதவிசெய்யும்படிக்கும், ஊக்கப்படுத்தும் படிக்கும் பெற்றுள்ளோம். இதுமாத்திரமல்ல, ஆனால் மனந்திருந்திய ஒவ்வொருவனும் இன்னொரு வேலையாளாகவும், சுவிசேஷம் பரம்பி மகிமைப்படுவதற்கு அதிகமான பண உதவியைக் கொண்டுவருகிறவனாகவும் மாறவேண்டும். நாம் இதைச் செய்ய ஆயத்தமாயிருக்கும்போது எந்த நேரத்திலும் உலகத்திற்கு கிறிஸ்துவை எடுத்துச் செல்ல முடியும். நாம் எழுந்து வாசல்களைத் தட்ட ஆரம்பித்து நமக்கென்று திறக்கப்பட்ட வாசல்களுக்குள் உட்பிரவேசிப்பது அவசியம். வாசல்களும் அதற்கு மேலாக வாசல்களும் கர்த்தருக்கென்றும் அவருடைய பணிக்கென்றும் பெரிய காரியங்களைச் செய்ய வழிநடத்தும் என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து "இதோ அடியேன், கர்த்தாவே, என்னை அனுப்பும்" எனக் கூறுவோமாக.

# இயேசு கிறிஸ்து நித்திய பலி

## Jesus Christ the Eternal Sacrifice

பெண்கள் பகுதி

- *Betty Burton Choate*

## The Choice of Families

## குடும்பங்களின் மேன்மை

நம்முடைய சரீரப்பிரகாரமான பிறப்பில் நாம் விரும்புகின்ற ஒரு குடும்பத்தில் பிறக்க அந்தக் குடும்பத்தைத் தெரிவு செய்ய இயலாது. நாம் நம்முடைய பிறப்பிற்குப்பின் வெளிப்படையாக நாம் பிறந்த அந்த குடும்பத்தின் அங்கமாக இருந்துகொண்டிருந்தோம்.

ஆவிக்குரிய பிரகாரமாக, நாம் எந்தக்குடும்பத்தின் அதாவது தேவனுடைய அல்லது சாத்தானுடைய குடும்பத்தின் அங்கமாக இருப்போம் என்பதைத் தெரிவு செய்துகொள்கிறோம். வெறுமனே தெரிந்துகொள்வதினால், தேவனுடைய பிள்ளையாக நம்மை மாற்றிக்கொள்ளுகிறதில்லை. அவருடைய குடும்பத்திற்குள் பிறக்க நாம் தண்ணீரின் பிறப்பு மற்றும் ஆவியின் பிறப்பாகிய ஞானஸ்நானம் என்ற பிறப்பிறகான வழிமுறையின் வழியாகச் செல்லவேண்டும்.

1பேதுரு1:22,23 மற்றும் 2:1:2 இந்த ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி மேலும் தெளிவுப்படுத்துகிறது. "......ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே.......அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே... இப்படியிருக்க.....நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்".

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை (கிறிஸ்துவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால் பிறந்தவர்கள்" (யோவா.1:12,13).

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்ததைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே...நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்களே..... மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.

ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலா.3:26,27;4:6,7).

**கிறிஸ்துவின் சகோதரத்துவத் தொடர்ச்சி**

வேதவாக்கியங்களில் கிறிஸ்து பரத்திற்கு எழுந்தருளின பிறகு, கிறிஸ்துவோடுகூட நம்முடைய சகோதரத்துவத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான நம்முடைய உறவினை ஏற்படுத்தி தேவனுக்கும் கிறிஸ்துவுக்குமிடையேயுள்ள முடிவில்லா பிதா-குமாரன் உறவினை பல குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன:

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகவும் மனுஷகுமாரனாகவும் மாம்சத்திலே பிறந்தார். அவர் வானத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட இரட்சகராக, தேவனுடைய குமாரனாகவும் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் பிறந்திருக்கிறவர்களுக்கு சகோதரராகவும் நிலைத்திருக்கிறார். அவரோடுள்ள சகோதரத்துவத்தின் மூலமே நாம் தேவனுடைய குமாரர்களாக அழைக்கப்படக் கூடியவர்களாயிருக்கிறோம்.

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; **தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே;** கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோம.8:16,17). யோவான்1:1-14-ன்படி ஆதியிலிருந்தே, வார்த்தை தேவனோடிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது, இந்தக்கூற்று தேவத்துவத்தில் சமத்துவத்தைக் காட்டுகின்றது. மேலும் அந்த வார்த்தை தம்மை வெறுமையாக்கி (பிலி.2:7), மனுஷ சாயலாகி, தேவனுடைய குமாரனாகத் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவராய் தம்மைத் தாமே தாழ்த்தி, தேவனுடைய முதற்பேரானவராகி தேவனுடைய சுதந்தரரானார். இதைப்போல தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறப்பதன் மூலம் நாம் கிறிஸ்துவினுடைய சகோதரரும், சகோதரிகளுமாக மாறும்போது, நாம் தேவனுடைய ஜனங்களும் கிறிஸ்துவுடனேகூட சுதந்தரருமாக இணைக்கப்படுகிறோம்.

"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதனிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; .....ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே

அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.....அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கும் எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது" (எபி.2:11,14,15,17).

"......கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; ...நாமே அவருடைய வீடாயிருப்போம் ......கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்"(எபி.3:6-14).

கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனுஷசாயலானது போல, அவருடைய சகோதரரும் கிறிஸ்துவினுடைய சகல பரிபூரணத்தினால் நிறையப்படும்போது அவர்களும் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறுவார்கள்!

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேதுரு1:3,4).

"நீங்கள் அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்..." (எபே.3:19).

தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களை ".....தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்" (ரோம.8:29).

"உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா?..... கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்" (1கொரி.6:15,17).

எனவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனிதவர்க்கத்திற்காக தொடர்ந்து மத்தியஸ்தராய் கிரியை நடப்பிக்கும்படிக்கு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். 1தீமோத்தேயு2:5-ன்படி, கிறிஸ்து இயேசு மனுஷனாக தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் தேவனுடைய குமாரனாகவும், மனுஷகுமாரனாகவும்: உயிர்த்தெழுந்தது, மறுரூபமாக்கப்பட்ட நமது இரட்சகராகவும் இருக்கிறார். நாமனைவரும் ஆவிக்குரியபிரகாரமாக அவருக்குள் "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்காளக மாறியிருக்கிறோம்".

கிறிஸ்துவ தலைமைத்துவ
பயிற்சி பாடங்கள்
Christian Leadership Training Course

பாடம் - 7

# பிரசங்கியாராவது எப்படி
## Becoming a Preacher

J.C.Choate

தேவனுடைய வார்த்தையிலிருந்து அவர் எப்படிப்பட்ட தலைவர்கள் தேவை என்கிறார் என்றும் இன்றைக்கு அப்படிபட்ட தலைவர்களை எப்படிபெற்றுக்கொள்வது என்றும் தெரிந்து கொள்வது முக்கியம். தவறான தலைவர்கள் தங்கள் போதனை மற்றும் வாழ்க்கையின் மூலம் வஞ்சிக்கக்கூடும். அவர்கள் உங்களை கிறிஸ்துவுக்கு பதிலாக தங்களைப் பின்பற்றும்படி ஊக்கப்படுத்த முடியும். மாறாக ஒரு உண்மையான தலைவன் நீங்கள் பரலோகம் செல்வதற்கு உதவியாக இருக்க முடியும். நிச்சயமாகவே இதைப் படித்ததின் விளைவாக, இதை படித்துக்கொண்டிருக்கிற உங்களில் சிலர் தேவனுடைய ராஜ்யமாகிய சபையிலே தலைவர்களாக வர விரும்பலாம். சபையிலே மூப்பர் உதவிக்காரர், பிரசங்கியார், போதகர் மற்றும் பெண்கள் போதிப்பதிலே ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும் படித்தோம். ஆனால் பிரசங்கியாரும் அவருடைய பணியும் எல்லாவற்றைக்காட்டிலும் மிக முக்கிய மானதாயிருப்பதால் இந்தத் தலைப்பின் கீழ் இதைக் குறித்து அநேக பாடங்கள் படிக்க விரும்புகிறோம். இந்த பாடத் தொடர்களை நாம் படிக்கும் போது பிரசங்கியாரின் வாழ்க்கையில் உள்ள பலவற்றைக் குறித்துப்பார்க்கப் போகிறோம். அதாவது அவருடைய குடும்பம், அவருடைய பயிற்சி, அவருடைய பழக்க வழக்கங்கள் மேலும் அவருடைய போதனைகள் போன்றவைகள்.

பிரசங்கியார்களாக மாறுவது பற்றிய சிந்தனையோடே இதைத் தொடங்குவோம். உலகத்திலே யார் பிரசங்கியாராக வேண்டுமென்று விரும்புவார்கள் என்று ஆச்சரியப்படலாம். இப்பொழுது ஏற்கனவே அநேக பிரசங்கியார் இருக்கிறார்கள் மேலும் சந்தேகமில்லை அநேகர் வேறு வேலை செய்வதை விட பிரசங்கியாராவதை விரும்புவர். கர்த்தரைப் பொறுத்தவரையில், மேலும் உண்மையாய் கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் பார்வையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதே இந்த உலகில் மிக பெரிய வேலையாக கருதப்படும். அது மிகப்பெரிய வேலை ஏனென்றால் ஒருவர் தேவனுடைய வேலையைச் செய்கிறார். அவர் மற்றவர்கள் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துக்கொள்ள உதவுகிறார். அவர் ஆண்கள் மற்றும் பெண்களுடைய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட சிறப்பாக உதவி செய்கிறார். மேலும் அவர்கள் தாங்கள் நித்தியத்தை எங்கே கழிக்க வேண்டுமென்று தீர்மானிக்க உதவுகிறார் (மாற்கு 16:15-16) (ரோமர் 10:13-15). இது மிக உன்னதமான நித்தியவேலை.

ஆனால் ஒருவர் எப்படி பிரசங்கியாகிறார்? அவர் பிரசங்கியாராக மாறுவதற்கு தீர்மானிக்கிறாரா? அவர் பிரசங்கியார் ஆகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறாரா? அவர் தேவனிடமிருந்து விஷேத்த அழைப்பு ஏதாகிலும் பெறுகிறாரா? அநேக பிரசங்கியார் கிறிஸ்தவ குடும்பப் பின்னனியிலிருந்து

வருகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வ தென்றால் தகப்பனும் தாயும் கிறிஸ்துவுக்கு விசுவாசிகள்,கர்த்தருக்கு கீழ்படிந்து இருக்கிறார்கள் அவர்கள் கிறிஸ்துவின்சபையில் அங்கத்தினர்கள். அவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் சபையோடே சேர்ந்து தொழுதுகொள்கிறார்கள். ஒரு வேளை ஒரு மகன் இருந்து வளரும் போது தன்னுடைய பெற்றோர்களாலும் மற்ற நல்ல கிறிஸ்தவர்களாலும் நல்ல தாக்கத்தைப்பெற்றால் அப்படியாகலாம். தான் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து கிறிஸ்தவனாகும்போது பிரசங்கியாராக விரும்பலாம். பல சமயங்களில் கர்த்தருடைய பந்தியை சபையாருக்குக் கொடுக்கவும், ஜெபிக்கவும் மற்ற வழிகளில் உதவியாக இருக்கவும் வாய்ப்பு அளிக்கப்படலாம். இது அவரை அதிகமாக சபையில் ஈடுபாடுள்ளவராக்கி போதிக்கவும் பிரசங்கிக்கவும் ஊக்கப்படுத்தலாம். இது ஒரு நல்ல மாதிரியான சந்தர்ப்பம். அநேக வாலிபர்கள் சபைக்குத் தானகவோ, நண்பர்கள் மூலமாகவோ அல்லது வேதாகம அஞ்சல் வழிபாடத்தில் சேர்ந்து பயில்வதன் மூலமாகவோ வருகிறார்கள். சபையோடும் தங்கள் தனிப்பட்ட படிப்பின் மூலமாகவும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய அவர்கள் தீர்மானிக்கிறார்கள். பிராந்திய சபை பிரசங்கியார்களால் அவர்கள் கவரப்பட்டு தங்களைச் சுற்றிலுமிருக்கிற இரட்சிக்கப்படாத மக்கள் இரட்சிக்கபடவேண்டுமென்கிற அக்கரையில் பிரசங்கியார் ஆக வேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள்.

மற்றவர்கள் மற்ற சபைகளில் கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள். இவர்கள் வயதில் மூத்தவர்களாயிருக்கிறார்கள். முன்னமே பிரசங்கித்த அனுபவம் பெற்று இருக்கிறார்கள் ஆகவே கர்த்தருடைய சபையில் பிரசங்கியாராக இருக்க வேண்டுமென்று தீர்மானிப்பது அவர்களுக்கு எளிதாக இருக்கிறது.

சத்தியமில்லாத சபைகளிலிருந்து வந்த இவர்களிலே சிலர் தேவன் தங்களை பிரசங்கிக்க விசேஷமாக அழைத்தார் என்று நம்புகிறார்கள். அப்படிப்பட்ட பிரசங்கியர்களைக் குறித்து எல்லா விதமான கதைகளும் சொல்லப்படுகின்றன. சிலர் கர்த்தர் அவர்களிடத்தில் உண்மையாகவே பேசினார் என்றும் எண்ணுகிறார்கள். வேறு சிலர் ஒரு அடையாளத்தை பெற்றுக் கொண்டதாகச் சொல்கிறார்கள். சிலர் சொப்பனம் கண்டதாகவும், வேறுசில காரியங்களையும் சொல்கிறார்கள். உண்மை என்ன வென்றால் கர்த்தர் எவரையும் தனிப்பட்ட விதத்திலோ அல்லது அற்புதமான வழியிலோ இவர்கள் சொல்கிற எந்த வழியிலும் இந்த நாட்களிலும், காலங்களிலும் யாரையும் அழைக்கவில்லை. அவருடைய வார்த்தைகளிலுள்ள கட்டளைகளின் மூலமாகவே தேவன் நம்மைப் பிரசங்கிக்க அழைக்கிறார். அந்த அழைப்பு எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் எருசலேம் நகரில்பிரசங்கித்த போது திரளான மக்கள் தாங்கள் என்னசெய்ய வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் சொன்ன பதிலை பின்வருமாறு வாசிக்கிறோம். "பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப்பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர்வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி" ....(அப்2:38-39).

எபேசியர்களுக்கு பவுல், அவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரமாக நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்கிறார் (எபேசியர் 4:1). தெசலோனிக்கேயருக்கு பவுல் சொல்வது "தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்" (1 தெச 2:12). ஆனால் எப்படி தேவன் அவர்களை அழைத்தார். பவுல் தெசலோனியருக்கு சொல்லுவதன் மூலம் பின்வருமாறு பதில் அளிக்கிறார் "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2 தெச 2:14). ஆனால் அவர்கள் எப்படி சுவிஷேத்தினால் அழைக்கப்பட்டார்கள். சுவிசேஷம் அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்டு அதன் மூலமாக அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து முன்பே சொன்னபடி அழைக்கப்பட்டார்கள்? "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு; என்னிடத்தல் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத்தேயு 11:28-30).

ஆகவே இந்த அழைப்பைக் குறித்து அற்புதமாகவோ அல்லது இயல்புக்கு மாறாகவோ ஒன்றுமில்லை. கிறிஸ்து சொன்னதை கவனித்துப்பாருங்கள்: "வந்து என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" கிறிஸ்துவினிடத்தில் வந்து கற்றுக்கொள்ளும் போது என்ன நடக்கிறது? நாம் அவரிலே விசுவாசிகளாகிறோம். கிறிஸ்துவின் நற்செய்தியாகிய அவருடைய மரணம், அடக்கம், உயிர்தெழுதல் பற்றி பிரசங்கிக்கப்படுவதன் மூலம் சுவிசேஷத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி நாம் அழைக்கப் படுகிறோம். கிறிஸ்துவை விசுவாசிக்கவும், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்யவும் நம்முடைய பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெறவும் அழைக்கப்படுகிறோம் (மாற்கு 16:16, அப்2:38). கர்த்தர் நம்மை இரட்சித்து அவருடைய சபையில் சேர்க்கிறார் (அப் 2:47). இவைகளெல்லாம் இயற்கையான சாதாரண கர்த்தருடைய திட்டத்தின் படியான நடவடிக்கைகள். விசுவாசிப்பதைப்பற்றியும். கீழ்ப்படிவதைப் பற்றியும் போதிக்கப்படுவதே இது. இதைக்குறித்து அற்புதமானது ஒன்றுமில்லை ஆனால் பிரசங்கிப்பதாக, அழைக்கப்படுவதைக் குறித்து அழைக்கப்படுவது என்ன? சபையினுடைய ஒவ்வொரு ஆண் அங்கத்தினரும் அதாவது உண்மையாய்க் கர்த்தருக்குள்

மனமாற்றம் அடைந்து கர்த்தரையும் மற்ற மனிதர்களுடைய ஆத்துமாக்களை நேசிக்க கூடிய தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவும், பிரசங்கிக்கக்கூடிய தன்மையும் உள்ளவரை கர்த்தர் அழைக்கிறார். இன்னும் சிறப்பாகச் சொல்வது என்றால் அவர்கள் ஒவ்வொருவரும் இதைச் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறார். கிறிஸ்து சொன்னார் "நீங்கள் உலகமெங்கும்போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" மாற்கு 16:15). வாலிப பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு பவுல் பின்வருமாறு சொல்கிறார்: "நான் தேவனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்ன மாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறதாவது சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தை பிரசங்கம் பண்ணு எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்திசொல்லு" (2 தீமோ 4:1-2).

இப்பொழுது, நீங்கள் ஒரு பிரசங்கியாரா? நீங்கள் பிரசங்கியாராக விரும்புகிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? வேதத்திலே வாசிக்கப்படுகிற சபையிலே நீங்கள் ஒரு அங்கத்தினரா? கர்த்தருடைய போதனையின்படி நீங்கள் அழைக்கப்பட்டவர்களா? நீங்கள் சத்தியத்தை மட்டுமே போதிப்பீர்களா?


## கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சிப் பாடங்கள்

- ★ சகோ. ஜே. சி. ஜோட் அவர்கள் எழுதியது
- ★ சகோ. ஜி. டானியேல் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டது
- ★ உங்கள் பிரதிக்கு முந்துங்கள்
- ★ ஊழியர்களுக்கான கையேடு இது
- ★ ஒரு சபைக்கு ஒரு பிரதி மட்டுமே
- ★ உங்களுடைய சபை மற்றும் உங்களுடைய தெளிவான முகவரி தேவை
- ★ தபால் செலவுக்காக ரூபாய் 10 அனுப்புங்கள்

குறிப்பு

இப்பிரதியைப் பெற்று உங்களுடைய இடத்திலே மெய்யான புதிய ஏற்பாட்டு திருச்சபையாகிய **கிறிஸ்துவின் சபையை** உருவாக்கலாம்.

**தொடர்புக்கு**

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**, த. பெ. எண் 5, வத்தலக்குண்டு – 624 202

தமிழ்நாடு – இந்தியா.

# ஆண்டவர் மீது நம்பிக்கையாயிருங்கள்

★ கர்த்தராகிய ஆண்டவரே நீரே என் நோக்கமும் என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர் - சங்.71:5.

★ ....... இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது போல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன் - அப்.24:15

★ ..... இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக் கடவோம் - 1தெச.5:8.

★ ....... சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒரு போதும் கெட்டுப்போவதில்லை - சங்.9:18.

★ ........ என் நம்பிக்கை விருதாவாய்ப்போக என்னை வெட்கத்திற்கு உட்படுத்தாதேயும் - சங்.119:116.

★ இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம் - 1தீமோ.4:10

★ எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள், நம்பின அவர்களை நீர் விடுவித்தீர் - சங்.22:4.

★ என் தேவனே உம்மை நம்பியிருக்கிறேன் நான் வெட்கப்பட்டு போகாதபடி செய்யும் - சங்.25:2.

★ கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள் - ஏசா.26:4

★ விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம் - கலா.5:5.

★ நம்முடைய, நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம் - எபி.10:23.

★ கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனிதன் பாக்கியவான் - சங்.40:4.

***M.Rajamani***

## ஜெபியுங்கள்



✦ கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற 23வது வாசகர் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களுக்காக ...

✦ இம்மாதம் வெளிவந்துள்ள கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சி பாடங்களுக்காக ...

✦ மாதஇதழ், தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊழியங்களுக்காக ...

# கர்த்தருக்குச் செவி சாய்ப்பவன்

*கர்த்தருக்குச் செவி சாய்ப்பவன்*
*காலிடறி வீழ்வதில்லையே! - வலு*
*சர்ப்பமெனும் சாத்தானால், அவன்*
*சஞ்சலங்கள் அடைவதில்லையே!*

*வேதத்தில் பிரியம் வைப்பன்*
*வெட்கப்பட்டு போவதில்லையே! - பெரும்*
*சோதனை, துயரங்களால், அவன்*
*சோர்வு அடைவதில்லையே!*

*சுவிசேஷப்படி நடக்கிறவன்*
*சுக போகங்களை விரும்புவதில்லையே!*
*புவியிலுள்ள இச்சைகளால், அவன்*
*புத்தி கெட்டுப் போவதில்லையே!*

*வசனத்திற்கு நடுங்குபவன்*
*விசனம் அடைவதில்லையே! - ஜீவ*
*வசனத்திற்குக் கீழ்ப்படிபவன்*
*ஆக்கினை அடைவதில்லையே!*

*கர்த்தரைத் தேடுகின்றவன் - மனக்*
*கலக்கம் அடைவதில்லையே!*
*கர்த்தரை கண்டடைந்தவன்*
*கள்ளப் போதகத்தில் மாய்வதில்லையே!*

*கர்த்தரோடு இசைந்திருப்பவன் - உலக*
*கவலையில் வீழ்வதில்லையே!*
*கர்த்தரைச் சேவிப்பவன் - கற்சிலை*
*சிற்பங்களை பணிவதில்லையே!*

*கர்த்தருக்குப் பயப்படுகிறவன்*
*பொல்லாங்கு செய்வதில்லையே!*
*கர்த்தருக்கு ஊழியம் செய்பவன்*
*மனித புகழ்ச்சியை நாடுவதில்லையே!*

*கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பவன்*
*கெட்டுச் சீரழிவதில்லையே! - வேத*
*அறிவில் வளர்ந்திருப்பவன், என்றும்*
*அழிவைக் காண்பதில்லையே!*

***S.Sengol Rayan***

# வேதாகம ஆலோசனை

**"இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதை பொருள்களையும் அறிந்துகொள்வான்"*(நீதி.1:4-6)***

## வேதாகம ஆராய்ச்சி பாடம்-4

**1. சபையைக் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது?**

**சபை கிறிஸ்துவின் சரீரம்:** "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷக ராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" (எபே.4:12,13). இப்படியிருக்கிறபடியினால் "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே.5:30). ஆகையால் நாமே அவருடைய சரீரமானால் இந்த சரீரத்தை எப்படி பாதுகாக்க வேண்டும்? பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ள வேண்டும். ஏனெனில் நாம் நமக்கே உரியவர்கள் அல்ல நாம் கிறிஸ்துவினுடையவர்கள் கிறிஸ்து தேவனுடையவர். மேலும் பவுல் எழுதும்போது, "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோ.1:24). நாம் அவருடைய சரீரமாகிய சபைக்காக மாம்சத்திலே நிறைவேற்றவேண்டிய பொறுப்பு நிறைய இருக்கிறது.

**சபை தேவனுடைய ரத்தத்தினால் வாங்கப்பட்டது:** "உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்.20:28). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து "தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:26,27). இன்றைக்கு நீங்கள் அதை நினைவுகூறுகின்றீர்களா? "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ.1:20).

# பேசும் வேதாகமம் - 21

★ தன் மனைவியைப் பார்த்து நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம் என்றவன் யார்? – மனோவா – நியா.13:22

★ ஏபால் பர்வதத்தில் இருப்பாயுதம்படாத முழுக்கற்களால் ஒரு பலி பீடத்தைக் கட்டினவன் யார்? – யோசுவா – யோசு.8:30

★ யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான எதுவும் இல்லை? – குறிசொல்லுதலும் இல்லை – எண்.23:23

☆ கூலிக்காரனுடைய கூலி விடியற்காலமட்டும் உன்னிடத்தில் என்ன செய்யலாகாது? – இருக்கலாகாது – லேவி.19:13

☆ தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை எவனிடத்தில் கர்த்தர் கொடுத்தார்? – மோசேயினிடத்தில் – யாத்.31:18

☆ என் ஆயுசு நாட்கள் கொஞ்சமும் சஞ்சலமுள்ளதுமாயிருக்கிறது என்றவன் யார்? – யாக்கோபு – ஆதி.47:9

★ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்று ரூத்தைப் பார்த்து சொன்னவன் யார்? – போவாஸ் – ரூத்.3:12

★ நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன் என்றவன் யார்? – சாமுவேல் – 1சாமு.12:23

★ உன்னைபோஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று யாரைப் பார்த்து கர்த்தர் சொன்னார்? – எலியா – 1இரா.17:4

★ தண்ணீர்கள் உடைந்தோடுகிறதுபோல, தேவன் என் கையினால் என் சத்துருக்களை உடைந்தோடப் பண்ணினார் என்ற ராஜா யார்? – தாவீது – 1நாளா.14:11


ஒரே வழி

**'The One Way'** வேதபாடம்
The Master Course -ஐ அஞ்சல் வழி மூலம் படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 15-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்.
அத்துடன் 'வேதாகம சபை' என்ற புத்தகத்தையும் பரிசாகப் பெற்றுக்கொள்வீர்கள். வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

# உங்கள் முடிவு என்ன?

## WHAT IS YOUR DECISION?

***- John Schwartz***



ஆன்மீக உலகம் இன்று நல்லதொரு வளர்ச்சியைக் கண்டு வருகிறது. இதற்கு முன் எப்பொழுதும் இல்லாத அளவு இன்று மக்களிடையே நல்ல மாற்றம் காணப்பெறுகிறது. பட்டிதொட்டிகளிலெல்லாம் பக்தியின் பரவசத்தைக் காணமுடிகிறது. நகரங்களில், பெரும் நகரங்களிலும் கூட அடிக்கடி ஆன்மீகக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. இவை மனித சமுதாயம் நல்ல மாற்றத்தைக் காண விரும்புகிறது என்பதற்கான அடையாளங்கள்.

கிறிஸ்தவ உலகிலும் இப்படிப்பட்ட விரும்பத்தகும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு வருவதை மகிழ்வுடன் காண முடிகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கிறிஸ்தவ நெறியில் வளர்க்க முயற்சிகளை மேற்கொள்ளுகிறார்கள். ஊழியத்திற்கென்று அள்ளிக் கொடுக்கும் பக்தர்களை பார்க்கிறோம். **உபவாசம் - ஜெபம்** என்று தங்களின் வாழ்க்கையில் அதிக நேரத்தை பயன்படுத்தும் அன்பர்களையும் அதிகமாகக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இவைகளையெல்லாம் பார்த்துப் பரவசம் அடைந்து நாம் மிகவும் மகிழ்ச்சி அடையும் நிலையில் தேவன் இவற்றைப் பார்த்து என்ன நினைக்கிறார் என்பதை சற்று சிந்திப்பது நல்லது.

மாற்கு 10-ம் அதிகாரத்தில் (வசனம் -21) இயேசு, அவனிடத்தில் அன்பு கூர்ந்து "உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு என்று கூறுகிறார்". இயேசுவால் குறையைச் சுட்டிக் காண்பிக்கப்பட்ட அந்த மனிதன் தனது சிறு வயது முதல் கற்பனைகளைக் கைக்கொண்டு சிறப்பான வாழ்க்கை நடத்தியதாகக் கூறுவதை 20-ம் வசனத்தில் வாசிக்கின்றோம். இப்படி நல்லொழுக்கமான வாழ்க்கை நடத்திய அந்த மனிதரிடத்தில் இருந்த குறையை அந்த மனிதனுக்கு உணர்த்துகிறதை வேதாகமம் நமக்கு வெளிச்சமிட்டுக் காண்பிக்கின்றது.

எனவே நம் சிறப்பான ஆன்மீக வாழ்க்கை திருப்தியோடு இருக்கலாம். ஆனால் நம்மில் உள்ள குறைகளை நமக்குச் சுட்டிக் காண்பிக்கும் கண்ணாடியாக வேதாகமம் இருப்பதால் வேதாகமம் நமக்குக் காட்டும் வெளிச்சத்தில் நமது வாழ்வை நடத்துவது அவசியம். மத்தேயு 7-ம் அதிகாரத்தில் 22-ம் வசனத்தை நாம் வாசித்தால், அதில் இயேசு கிறிஸ்துவின் பெயரால் தீர்க்கதரிசனம் சொன்ன, பிசாசுகளைத் துரத்தின, அநேக அற்புதங்களைச் செய்த ஒரு கூட்டம் பக்தர்களைப் பார்த்த இயேசு, **அக்கிரம செய்கைக்காரர்கள்** என்னைவிட்டு அகன்று போங்கள்,

என்று சொல்லப்படுவதாகக் கூறுவதை மத்தேயு 23-ல் கூறுவதைக் கவனிக்கவேண்டும். அப்படி என்ன அக்கிரமத்தை அவர்கள் செய்தார்கள்? வசனம் 21-ல் பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்தம் என்னவென்று அறிந்து, அதன்படி செயல்படவில்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறார். இதே மத்தேயு15:9-ல் இறைவனால் கொடுக்கப்பட்ட கட்டளையை விடுத்து மனுஷருடைய உபதேசங்களைப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறீர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. மக்கள் 1கொரிந்தியர்13-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது போல சகலமும் இருந்தும் அன்பில்லாவிட்டால் என்ன பயன்? இதைக்குறித்து அன்பின் சீஷன் யோவான் என்ன கூறுகிறார்? யோவான்14:15-ல் நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று திட்டவட்டமாக கூறவில்லையா?

அன்பான நண்பர்களே, உங்கள் பக்தி நல்லதுதான் உங்கள் தான தர்மம் சிறந்தது தான், உங்கள் வாழ்வு சிறப்பானது தான், இவைகளை விட சிறப்பானது வேத வசனங்களுக்குக் கீழ்ப்படிவது தான். விக்கிரக ஆராதனை பாவம் என்று தெளிவாக வேதாகமம் கூறுகிறது. அவருக்கு ஒப்பான எந்தப்படமோ சிலையோ வைக்கக்கூடாது, ஆனால் அநேகர் அவருடைய கட்டளையை தூக்கி எறிந்துவிட்டு அவருக்கு சிலை வைத்து, படம் வைத்து அவற்றை அலங்கரித்து அதைப் பணிந்து கொள்கிறார்கள். இதை எப்படி அவர் ஏற்று மகிழ்வார். எனவேதான் அக்கிரமச் செய்கைக்காரரே என்று கடிந்து கொள்ளுகிறார்.

பிரமாணத்தை மீறுகிறதே பாவம் .... For sin is the transgression of the law என்று 1யோவான்3:4-ல் வாசிக்கின்றோம். மரியாள் கூறுவதைக் கேட்போமா? "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள்" (யோவா.2:5). அதன்படி செய்தார்கள் நன்மையைப் பெற்றார்கள். நான் இங்கு "**அற்புதத்தைக் கண்டார்கள்**" என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் நான் அப்படி குறிப்பிடவில்லை. காரணம் கிறிஸ்தவ வாழ்க்கையில் **அற்புதத்தை** முதன்மைப்படுத்துவது சிறந்தது அல்ல. கீழ்ப்படிதலையும், அதன் விளைவாகப் பெறும் ஆசீர்வாதத்தையும், மனதிற்கொண்டு வாழ்வதே சிறப்பு.

கிறிஸ்தவ வாழ்வில் முக்கியமானது **விசுவாசம்.** விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி.11:6). "**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்**" (மாற்.16:16). உண்மையான விசுவாசம் வேத வசனத்தின் அடிப்படையில் ஏற்பட வேண்டும் ரோமர்10:17. நமது கற்பனைகள், கனவுகள் அல்லது பாரம்பரியப் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் ஏற்படுவது விசுவாசம் ஆகாது. எனவேதான் "**என் பிதாவின் சித்தத்தின்படி செயல்படுங்கள்**" என்று நமதாண்டவரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்து கூறுகிறார். இது குறித்து உங்கள் முடிவு என்ன? சிந்தித்துச் செயல்படுங்கள்.

## வேதஅறிவுப்போட்டி எண் 71–ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| J.ஜாஸ்மின்வின்செண்ட்ராஜ் | -மதுரை |
| S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| S.ராஜபிரசாத் | -மதுரை |
| P.அலிஸ்மேரியம்மாள் | -வதிலை |
| G.ஜெயசிங் | -சென்னை |
| K.தங்கவேல் | -பாண்டிச்சேரி |
| E.ஜோசப்தேவதாஸ் | -நாகமலை |
| Mrs.ஜாய்கிறிஸ்டினா | -நாகமலை |
| N.கமலவேணி | -சென்னை |
| S.சுந்தரி | -சென்னை |
| G.P.ஏசையன்ராஜ் | -கோபி |
| Mrs.லலிதாபிரேமகுமாரி | -மதுரை |
| Mrs.வனிதாசாமுவேல் | -மதுரை |
| G.பூங்கோதை | -கோபி |
| R.ஆனந்தகுமார் | -கோபி |
| D.யேசுதாஸ் | -சித்தூர் |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை |

## வேதஅறிவுப்போட்டி எண் 71–ன் விடைகள்

| | |
|---|---|
| 1. கிபியா | -நியாய.20:5 |
| 2. யூதாஸ் | -அப்.1:18 |
| 3. எமோரியர் | -ஆமோஸ்2:9 |
| 4. பவுல் | -2கொரி.2:16 |
| 5. கட்டையினிடத்தில் | -ஓசி.4:12 |
| 6. அவனுக்குப் | -ரோம.15:2 |
| 7. நித்திய | -ஆபகூக்3:6 |
| 8. அழிவீர்கள் | -கலா.5:15 |
| 9. சாரமற்ற | -எசே.22:28 |
| 10. நல்லது | -புல.3:27 |

## பொது அறிவுச் சோதனை

1. அதிகமான பரப்பளவு கொண்ட நாடு எது?

அ) சீனா ஆ) ரஷ்யா இ) இந்தியா

2. கொரில்லாபோர் முறையை ஏற்படுத்தியவர்கள் யார்?

அ) முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஆ) மராட்டிய ஆட்சியாளர்கள் இ) விஜயநகர ஆட்சியாளர்கள்

3. இஞ்சி எதனை குணப்படுத்த பயன்படுகிறது?

அ) செரித்தல் ஆ) தலைவலி இ) மஞ்சட்காமாலை

4. நாகலாந்தின் ஆட்சி மொழி எது?

அ) காசி ஆ) நாகா இ) அசாமிய மொழி

5. கடற்படைதினம் எந்த நாளில் அநுசரிக்கப்படுகிறது?

அ) நவம்பர்28 ஆ) நவம்பர்4 இ) நவம்பர்6

விடைகள்:
1. ரஷ்யா
2. மராட்டிய ஆட்சியாளர்கள்
3. செரித்தல்
4. அசாமிய மொழி
5. நவம்பர்4

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது -மாற்கு14:38

சிறுவர் பகுதி

# விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியவர்கள்

**வேத பகுதி: 1தீமோத்தேயு1:19,20**



சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்திய தாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். சபையை விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாள் வருஷிக்கப்பண்ணியபோது ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது. கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்கிறார். பவுல், அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். சில சமயங்களில் நாம சொன்னபடி கேட்காவிட்டால் அப்பா அம்மா இப்படி சொல்லுவாங்க, அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று இல்லையா? ஆமாம் நாம விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது, அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

**மனப்பாட வசனம்:**

“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்”-1பேதுரு5:8

## வேத அறிவுப் போட்டி எண்.72

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

***கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். புதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. எந்தப் பிரதான ஆசாரியன் காலத்திலே தாவீது புசிக்கத்தகாத தெய்வசமூகத்து அப்பங்களைத் தானும் புசித்துத் தன்னோடிருந்தவர்களுக்கும் கொடுத்தான்?
2. மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்று எந்த தீர்க்கதரிசியைப் பார்த்து கர்த்தர் சொன்னார்?
3. தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள் என்று சொன்ன அப்போஸ்தலர் இருவர் யார்?
4. சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான தங்கள் இருதயத்தின் இச்சையிலே எவர்கள் நடக்கிறார்களோ அவர்களுடைய எதின் பலனை அவர்கள் தலைகளின்மேல் அமரப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்?
5. கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் உங்களைப் பெற்றேன் என்றவர் யார்?
6. சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக எதை திறவுங்கள்?
7. நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது, சுபாவத்தின்படி எவர்களுக்கு அடிமைகளா யிருந்தீர்கள்?
8. அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும் என்று சொன்ன ராஜா யார்?
9. தேவ பக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே எப்படியுள்ளது?
10. தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்துகொண்டு பலியிடுகிற கபடஸ்தன் எப்படிப்பட்டவன்?


## நடப்புச் செய்திகள்

- வெளிநாடுகளில் சிக்கன நடவடிக்கையாக பெட்ரோல், டீசலில் பாமாயில் கலப்பது அதிகரித்துள்ளது. இதனால், இந்தியாவில் பாமாயில் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
- லெபனான் நாட்டுக்கு உதவ ரூ.10 கோடி வழங்கப்படும் என்று பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்துள்ளார்.
- மெட்ரிகுலேஷன் 10–வது வகுப்பு தேர்வு கேள்வித்தாள் முறையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.
- இலவச கலர் டி.விக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சாரத்துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி அறிவித்துள்ளார்.
- சென்னை ஓட்டல் ஒன்றில் வளர்க்கப்பட்டு வந்த உலகின் மிகச்சிறிய குரங்கு இனமான 'மெர்மோகெட்' என்ற அபூர்வவகை குரங்கை கால் நடை துயர்தடுப்புக் கழகத்தினர் மீட்டனர்

Owned and Published by B. Arjunan from
17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and
Printed by R. Sathiyamoorthi at Bharathi Press,
14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202. Editor : B. Arjunan.


Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR/DDL/164/2006-2008 Licensed to
Post without prepayment License No. TN/WPP-25/SR/2006-2008
Posted at Batlagundu Post Office on 10th August 2006

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.




கிறிஸ்துவின் சபை
17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம் போன் : 04543 - 263278 செல் : 9443558041
E-mail : thewordofchrist@sancharnet.in

கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை




திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில் உங்கள் WIN TV-யில் ஒவ்வொரு வாரமும்
காலை 6-15 முதல் 6-30 மணிவரை பாருங்கள்
மற்றும்



உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவையில்
SW 49 மீட்டரில் ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00
மணிவரை கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்.

**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் ஆண்டு சந்தா**
ஆண்டு சந்தா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

**Monthly Magazine**

To

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India